திருச்சிராப்பள்ளி ஸ்ரீ ஐயப்ப சங்கம்.
வாரம் ஒரு நீதிக்கதை – 26.04.2026

# ஆசிரியர் பணி ஓர் அறப்பணி ..!

என் பெயர் தமிழரசன். "அரசு வாத்தியார்" என்றால் அனைவருக்கும் தெரியும். அரசு பள்ளியில் ஆசிரியர். 36 வருட பணி அனுபவம். திருமணம் செய்து கொள்ளவில்லை. காரணம்.. என் மாணவர்கள்தான் என் குடும்பம்.

1989-ல் ஆசிரியர் பணியில் சேர்ந்தேன். கிராமத்து பள்ளிக்கூடம். கூரைக் கட்டிடம். 40 மாணவர்கள். கால்களில் செருப்பு இல்லை.. கிழிந்த சீருடை.. சாப்பாட்டிற்கு வழி இல்லை..
ஆனாலும், அவர்களின் கண்களில் கனவு இருந்தது. "சார், நான் போலீஸ் ஆவேன்.. சார், நான் டாக்டர் ஆவேன்.. சார், நான் கலெக்டர் ஆவேன்.. என்று அவர்கள் சொல்வதைக் கேட்கும் போது என் மனம் மகிழ்ச்சி அடையும்.

என் சம்பளம் 1200 ரூபாய். அதில் 800 ரூபாய்க்கு மாணவர்களுக்கு நோட்டு, பேனா, புத்தகம் போன்றவற்றை வாங்கித் தருவேன். மதிய உணவு அவர்களுக்குப் போதுமானதாக இல்லை என்று தெரிந்தால், என் வீட்டில் இருந்து சாப்பாடு கொண்டு வந்து கொடுப்பேன்.

"சார் நீங்க சாப்பிடலையா...?" என்று மாணவர்கள் கேட்டால், "நீங்க சாப்பிடுறதை பார்த்தாலே.. எனக்கு வயிறு நிறையும்" என்று சொல்வேன்.

என்னிடம் படித்த மாணவன் ஒருவன் பெயர் முத்து. மிகவும் சுட்டி. ஆனால் படிப்பில் புலி.

"சார். நான் நன்றாகப் படித்து, கலெக்டர் ஆகி உங்களைக் கார்ல கூட்டிகிட்டு போவேன்" என்று சொல்வான். நான் சிரிப்பேன்.. "முதலில் பத்தாம் வகுப்பு பாஸ் பண்ணு" என்று சொல்லுவேன்.

பத்தாம் வகுப்பு தேர்வு முடிவுகள் வந்தது. பள்ளியிலேயே முதல் மாணவனாக முத்து தேர்ச்சி அடைந்திருந்தான். ஆனால், குடும்ப வறுமை காரணமாக பதினோராம் வகுப்பு படிக்க முடியாமல், வேலைக்குச் செல்ல வேண்டிய கட்டாயத்திற்குத் தள்ளப்பட்டான்.

அன்று இரவு 12 மணிக்கு என் வீட்டு கதவை யாரோ தட்டினார்கள். பார்த்தால் கண்கள் எல்லாம் வீங்கிப் போய் அழுதுகொண்டே, "சார்.. என்னால படிக்காமல் இருக்க முடியாது சார்.." என்று சொல்லி என் கால்களில் விழுந்து அழுதான் முத்து.

அன்றைக்கு முடிவு செய்தேன். இவனை எப்படியாவது படிக்க வைக்க வேண்டும் என்று. என் திருமணத்திற்காகச் சேர்த்து வைத்திருந்த 50,000 ரூபாய் பணத்தை வங்கியிலிருந்து எடுத்தேன். அவனைப் பக்கத்து நகரத்தில் உள்ள ஒரு பள்ளியில் சேர்த்துவிட்டு, அங்கேயே தங்கி படிக்கும் வகையில் விடுதியிலும் சேர்த்து, விடுதிக் கட்டணமும் நானே கட்டினேன். மாதாமாதம் அவனுடைய தேவைக்காக பணம் அனுப்பி வந்தேன்.

ஒரு நாள் "எனக்காக எதுக்கு இவ்வளவு செய்றீங்க சார்..?" என்று முத்து எனக்கு ஒரு கடிதம் எழுதி இருந்தான்.

“நீ நன்றாக படித்து. நல்ல நிலைக்கு வர வேண்டும் என்பதற்காகத்தான் இதை எல்லாம் செய்கிறேன்” என்று பதில் எழுதினேன். ஆண்டுகள் ஓடின... எனக்கும் முத்துவிற்கும் இருந்த கடிதத் தொடர்பு மெல்ல மெல்ல மறைந்தது.

நானும் பணியில் இருந்து ஓய்வு பெற்று விட்டேன். யாருக்கும் சொல்லவில்லை. சிறிய வாடகை வீடு.. மாத ஓய்வு ஊதியம்.. அந்த ஓய்வு ஊதியத்திலும் பாதி தொகைக்கு மேல் இப்பொழுதும் பள்ளியில் படிக்கும் பிள்ளைகளுக்கு நோட்டு புத்தகம் வாங்கிக் கொடுப்பேன். தனியாகத்தான் வாழ்ந்துகொண்டு இருந்தேன்.

கடந்த மாதம் காலை 6 மணி அளவில் வீட்டு வாசலில் மூன்று கார்கள் வந்து நின்றன. காக்கிச்சட்டை போட்ட போலீஸ்காரர்கள் இறங்கினார்கள். என்னவென்று தெரியாமல் நான் பயந்துவிட்டேன்.

காரில் இருந்து ஒருவர் இறங்கினார். வெள்ளை சட்டை, பேண்ட் என்று கம்பீரமான தோற்றத்துடன் நேராக என்னிடம் வந்து, “சார்.. என்று அழைத்தபடி என் கால்களில் விழுந்து வணங்கினார்.

அவரை தூக்கி நிறுத்தி, “சார்.. யாருங்க நீங்க?” என்று கேட்டேன்.

வந்திருந்த நபரின் கண்களில் கண்ணீர். “சார்.. என்னைத் தெரியலையா? நான்தான் சார் உங்க முத்து..” என்று சொல்ல..

என் முத்துவா.. அன்றைக்கு கிழிந்த ஆடையோடு வந்த பையன், இன்றைக்கு மாவட்ட ஆட்சியர்.. அப்படியே மகிழ்ச்சியில் உறைந்து போய் நின்று விட்டேன்.

“சார். உங்களுக்கு நினைவிருக்கிறதா.. நான் படித்து கலெக்டர் ஆன பிறகு, உங்களைக் காரில் அழைத்துச் செல்வேன் என்று அன்றைக்குச் சொன்னேன். இப்போது வந்திருக்கிறேன் சார்.. வந்து காரில் ஏறுங்க சார்..” என்று சொன்னான் முத்து. அந்த இடத்தில் ஊரே திரண்டு நின்றது.

36 வருடங்களாக நான் எதற்காகவும் அழுததில்லை. இந்த நிமிடம் என் கண்களில் கண்ணீர். அது மகிழ்ச்சியின் காரணமாக..

முத்து, என்னை காரில் ஏற்றிக் கொண்டு போனான். எங்கு தெரியுமா? நான் வேலை பார்த்த அதே கூரை பள்ளிக்கூடத்துக்கு. இப்பொழுது அது மூன்று மாடிக் கட்டிடம்.

பள்ளியின் உள்ளே நுழைந்தோம். ஆயிரம் மாணவர்கள். எல்லோரும் எழுந்து நின்று, “வணக்கம் ஐயா” என்று சொன்னார்கள்.

முத்து பேச ஆரம்பித்தான். “இவர்தான் என் வாத்தியார். இவர் இல்லை என்றால், இன்று நான் இல்லை. இன்றைக்கு இந்த மாவட்டத்தில் வறுமை காரணமாக ஒரு பிள்ளைகூட படிக்காமல் இருக்க கூடாது. அதற்காக இன்று வரை நான் சேமித்த பணம் மற்றும் என்னுடைய சம்பளப் பணத்தில் இருந்தும் 50 லட்சம் ரூபாயைக் கொண்டு இந்தப் பள்ளியிலே “அரசு வாத்தியார் கல்வி அறக்கட்டளை” என்ற பெயரில் ஒரு அறக்கட்டளையைத் தொடங்கி, அதன் வாயிலாக ஏழை மாணவர்கள் படிக்க வழிவகை செய்துள்ளேன்.”

பிள்ளைகள் எல்லோரும் ஓடி வந்து என் காலில் விழுந்து வணங்கினார்கள்.

முத்து அன்று மாலை என்னை, அவனுடைய வீட்டிற்கு அழைத்துச் சென்றான். பெரிய பங்களா அது. "இனி இதுதான் உங்க வீடு சார். நீங்க தனியா இருக்க கூடாது" என்றான்.

"வேண்டாம் முத்து. எனக்கு என் வாடகை வீடே போதும்" என்று நான் சொல்ல, "அப்போ. நானும் உங்களோட அங்க வந்து இருக்கேன்" என்றான் முத்து பிடிவாதமாக.

இன்றைக்கு என் வாடகை வீட்டில் நான், முத்து, அவன் மனைவி மற்றும் இரண்டு குழந்தைகள் என்று அனைவரும் மகிழ்ச்சியாக வாழ்ந்து வருகிறோம். காலையில் எழுந்ததும் "தாத்தா காபி.." என்று பேரன் கொண்டு வருவான்.

பல ஆண்டுகளுக்கு முன்பாக நான் விதைத்த விதை, இன்றைக்கு மரமாக நிற்கிறது.. நிழல் கொடுக்கிறது.. கனி கொடுக்கிறது..

நமக்கு யாருமே இல்லை என்று சில நேரங்களில் வருத்தப்பட்டாலும், இன்றைக்கு ஆயிரம் பிள்ளைகள் என்னை "ஐயா" என்கின்றனர். ஒரு கலெக்டர் என்னை "அப்பா" என்று கூப்பிடுகிறார்.

வாத்தியார் வேலை சம்பளத்திற்கான வேலை இல்லை...
அது சமூகத்திற்கான சேவை என்பதை மீண்டும் என் மனம் உணர்ந்தது.

அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல்
ஆலயம் பதினாயிரம் நாட்டல்
பின்னருள்ள தருமங்கள் யாவும்
பெயர் விளங்கி ஒளிர நிறுத்தல்
அன்ன யாவினும் புண்ணியம் கோடி
ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்.
- பாரதியார்